*கவனிக்க.- 2015.09.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1935 - 2015 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2015.10.02

*1935 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1304 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனை | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1308 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1309 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## அம்பலன்தொட்ட பிரதேச சபை

அம்பலன்தொட்ட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள தென் மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கனிஷ்ட சேவையின் ஆரம்ப நிலைக் கலைஞர்கள்/மத்திய நிலை கலைஞர்கள் மற்றும் கலைத்துறையைச் சேராத பல சேவைப் பிரிவுகளுக்குட்பட்ட கீழே குறிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக உரிய தகுதியுடையவர்களை சூரிய அம்பலன்தொட்ட பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தின் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வெற்றிட எண்ணிக்கை | மாதாந்தச் சம்பளஅளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார ஊழியர் தரம் III | 02 | உ. ஆ. நி. சு. அ. 06/2006 (iv) PL1-2006 A யின் படி மாதாந்தம் 11,730-120×10-130×10-145×10-160×12-ரூபா 17,600 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் |

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியம் உடையதாகும் ;

(ii) இப்பதவி 3 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகளைத் தவிர இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் கட்டளைகளுக்கும் மற்றும் நிதிக் கட்டளைகளுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், அரச மற்றும் தென் மாகாண சபை மற்றும் அம்பலன்தொட்ட பிரதேச சபையினால் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

(1) விண்ணப்பதாரிகள் பரம்பரை மூலம் அல்லது பதிவு மூலம் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) நன் நடத்தையுடையவராகவும், நல்ல சரீர சுகத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்;

(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 5 வருடகாலம் பூர்த்தியாக்கப்பட்ட கிட்டத்தட்ட 3 வருட காலத்திற்கு அம்பலன்தொட்ட பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் வதிவாளர் என்பதை சான்றுபடுத்தல் வேண்டும் ;

(4) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயத எல்லை கவனிக்கப்படமாட்டாது;

(5) தேவைக்கு ஏற்ற விதத்தில் எழுத்துமூல/ அமைப்பு/ செயல்முறை மற்றும் நேர்முக பரீட்சை மூலம் தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்;

(6) நீதி குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;

(7) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, அறிவித்தலை இரத்துச் செய்தல் உட்பட அனைத்து தகுதிகளும் அம்பலந்தொட்ட பிரதேச சபையின் செயலாளரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். தற்போது அமைய தற்காலிக சேவையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை.-**

(அ) விண்ணப்பப்படிவத்தினை கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயார் செய்து விண்ணப்பிக்கப்படும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் எழுதி 2015.10.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "செயலாளர், அம்பலன்தொட்ட பிரதேச சபை, அம்பலந்தொட்ட" என்று முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். தாமதமாகி அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுண்டு.

(ஆ) விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்);
(4) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(5) பயிற்சிச் சான்றிதழ் ;
(6) பதவிக்கு உரியவாறு திறமைச் சான்றிதழின் பிரதி.

பூர்த்தியாக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, பிரதான தகுதிகளை பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

பி. நம்புகார கமகே,
செயலாளர்,
அம்பலன்தொட்ட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அம்பலன்தொட்ட,
2015, செத்தெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார ஊழியர் தரம் III**

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர் :-----.
3. நிரந்தர விலாசம் :-----.
4. பால் (ஆண்/பெண்) :-----.
5. திருமணமானவரா?/திருமணமாகாதவரா?
6. (i) பிறந்த திகதி :----.
   (ii) 2015.10.16 ஆந் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
8. தேசிய இனம் :-----.
9. இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பிரஜா உரிமை மூலமா? பதிவின் மூலமா? :-----.
10. அம்பலன்தொட்ட பிரதேச சபை வலுப் பிரதேசத்தின் வதிவு காலம் :-----.
11. கல்வித் தகைமைகள் :-----.
12. தேர்ச்சி தொடர்பான விபரம் :-----.
13. வேறு தகைமைகள் :-----.
14. தண்டனைச்சட்டக் கோவையின் பிரகாரம் நீர் நீதிமன்றத்தில் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் :-----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்களில் எவையாயினும் பிழையானது எனத் தெரியவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் நியமனத்தின் பின் தெரியவந்தால் எனது நியமனம் எந்த வித நட்டஈடும் செலுத்தாது இரத்துச் செய்யப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : -----.

10-123

## கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை

தென் மாகாண அரச சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக உரிய தகைமைகள் உள்ள தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | 01 | PL 1-2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | க. பொ. த. (சா./த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளோடு ஆறு பாடங் களில சித்தியடைந்திருத்தல் |

**2. சேர்த்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள் .-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி விண்ணப்பிக்கின்றபோது தென்மாகாண எல்லைக்குள் குறைந்தது மூன்று வருடங்களுக்கு நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பிக்கும் திகதிக்கு 18 வயதைத் தாண்டியவராகவும் 45 வயதிற்குக் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். (அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர ஊழியர் தொடர்பான உச்ச வயது கவனிக்கப்படமாட்டாது) ;
(iv) விண்ணப்பதாரி சிறந்த குணநலன்களையும் சிறந்த உடலாரோக்கியத்தையும் உடையவராயிருத்தல் ;
(v) கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் உரிய பதவியில் பதில்/சமயோசித/ஒப்பந்த பதவிகளில் சேவையிலீடுபட்டிருப்பவர் தொடர்பாக முன் உரிமை செலுத்தப்படும் ;
(vi) குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவைப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெற்றவராயிருத்தல் கூடாது;
(vii) விண்ணப்பித்த பின் அல்லது விண்ணப்பிக்கின்ற கால எல்லைக்குள் அல்லது இவ் ஆட்சேர்ப்பினை பிற்போடுதல் அல்லது வேறாக்குதல், இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் அல்லது மாற்றங்கள் செய்தல் என்பன தொடர்பான அதிகாரம் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

**3. சேவையிலமர்த்துதல் தொடர்பான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியமுடையதுமாகும் ;
(ii) நியமனம் 3 வருட நன்னடத்தைக் காலத்தைக் கொண்டது ;
(iii) இவ்வாட் சேர்ப்பின் நிபந்தனைகள், சட்டதிட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கை தாபன விதிக் கோவையின் சட்டதிட்டங்களுக்கமையவும், நிதிக் கோவைக்கு ஏற்பவும், திணைக்களத்தின் நியமங்களுக்கு ஏற்பவும், தென் மாகாண சபையின் அல்லது தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அல்லது கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் மூலம் அவ்வப்போது வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு கடமைப்பட்டிருத்தல்.

விண்ணப்பத்தோடு பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :

(i) பிறப்பு சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ்;
(iv) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரது சான்றிதழ்;
(v) அண்மையில் பெறப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள் 2 ;
(vi) வேறு தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
(vii) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்.

**4. விண்ணப்பிக்க வேண்டிய முறைகள் :**

(i) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட (A4 அளவிலான) விண்ணப்பம் ஒன்று 2015.10.31 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை, கிரிந்த" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் ;
(ii) விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் உரிய பதவியைக் குறிப்பிடல் வேண்டும் ;
(iii) ஏற்கனவே அரச, மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் தமது தாபனத் தலைவரின் சிபாரிசுடனே அனுப்பப்படல் வேண்டும் ;

(iv) கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்தோடு காலதாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

டி. கே. தயாசீலி,
செயலாளர்,
கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிந்த புஹுல்வெல்ல,
2015, செத்தெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை**

தென்மாகாண அரச சேவையின் ........................................................................ பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. (அ) நீங்கள் இலங்கைப் பிரஜையா ? :----.
(ஆ) அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவின் மூலமா? :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. ஆண்/பெண் பால் :----.
7. திருமணம் முடித்த/முடிக்காத தன்மை :----.
8. தொலைபேசி இலக்கம் :----.
9. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
10. 2015.10.31 ஆந் திகதிக்கு வயது :-
வருடம் :----, மாதம் :----, நாள் :----.
11. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகள் பற்றிய விபரம்) :----.
12. தொழில் தகைமைகள் :----.
13. சேவை அனுபவம் :----.
14. நீர் எப்போதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா? :----.
15. தற்போது பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளீராயின் அது தொடர்பான விபரம் :----.

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப சரியானவை என உறுதி கூறுகிறேன். இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டால் நான் நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவனாக ஆவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கு அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியாகிய செல்வி/திரு./திருமதி .............................................. தற்போது இந்த திணைக்களத்தின்/நிறுவனத்தின் .................................... ஆக சேவையாற்றுகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதமான ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) ஆளாக்கப்படவில்லை என்பதனையும் இதன் மூலம் உறுதிப்படுத்துவதோடு, விண்ணப்பப் படிவத்தை சிபாரிசு செய்து முன்வைக்கிறேன்/மறுக்கிறேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரையை இடுக)
திகதி :----.

10-274

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வரக்காபொல பிரதேச சபை

*களியாட்ட வரி விதித்தல் – 2016*

*(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப கேகாலை மாவட்டத்தில் வரக்காபொல பிரதேச சபையினால் 2015.07.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 06.02.06 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் (2) ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய களியாட்ட வரி கட்டளைகள் சட்டத்தின் (2) ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப சபரகமுவ மாகாண சபை உள்ளூராட்சி விடயங்களிற்கு பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

*பி. ஏ. சீ. கீர்த்திசிறி விஜேதுங்க,*
*தவிசாளர்,*
*வரக்காபொல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*வரக்காபொல,*
*2015, யூலை 28.*

### தீர்மானம்

*(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச சட்டத்தின் இரண்டாம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப வரக்காபொல பிரதேச சபையின் அதிகார எல்லையினுள் நடாத்தப்பட்ட (குறித்த கட்டளைகள் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள) களியாட்ட நடவடிக்கை ஒன்றிற்காக செலுத்தப்படுகின்ற கட்டணங்களிலிருந்து 25 வீத வரியும், சினிமா தியேட்டர்களிலிருந்து 75 வீத வரியும், இப்பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் விதித்த அறவிடுதல் வேண்டுமென வரக்காபொல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*10-286*

---

## கட்டுவன பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உரிய துணைவிதிகள்) சட்டத்தின் (261 ஆவது அத்தியாயம்) 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் தரப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கட்டுவன பிரதேச சபையில் 2015, யூலை 17 ஆந் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை வகுத்திடல் குழுக்கூட்டத்தில் 9 ஆம் இலக்க பிரேரணையானது அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

*எச். ஏ. எம். புஷ்பகுமார,*
*செயலாளர்,*
*கட்டுவன பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கட்டுவன,*
*மித்தெனிய,*
*2015, யூலை 17.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி (வகிபாக விதிமுறைகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியில் வழங்கப்பட்ட மற்றும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உரிய துணைவிதிகள்) சட்டத்தின் (261 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், தென் மாகாண பிரதேச சபை உள்ளூராட்சி உரிய விடயதான அமைச்சரினால் தயார்படுத்தியதும், 2013.05.17 ஆந் திகதிய 1811 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டதென 2014.08.29 ஆந் திகதிய 1878 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்மூலம் அறிவிப்புச் செய்யப்பட்ட துணைவிதி இலக்கம் xxvii ஆம் பகுதி விளம்பர அறிவித்தல் தொடர்பான துணை விதி தவிர்ந்து ஏனைய துணைவிதிகள் இந்தப் பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்தே ஏற்கப்பட்டு செயலேற்றிட மேற்படி உள்ளூராட்சி நிறுவன (உரிய துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் 1 ஆவது உபபிரிவின் கீழ் கட்டுவன பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.*

I ஆவது பிரிவு - எல்லா வகை உரிய துணைவிதிகளுக்குமான வரைவிலக்கண துணைவிதிகள்.
II ஆவது பிரிவு - எல்லா வகை துணைவிதிகளுக்குமான பொது விதிமுறைகள் தொடர்பான துணைவிதிகள்.
III ஆவது பிரிவு - ஏதாவது ஒரு துணைவிதியின் பொது விதிமுறை அல்லது கட்டளைகள் மீறுதல் தொடர்பான தண்டனை தொடர்பான துணைவிதிகள்.
IV ஆவது பிரிவு - மீன்விற்பனை தொடர்பான துணைவிதிகள்.
V ஆவது பிரிவு - மாமிசம் விற்பனை தொடர்பான துணைவிதிகள்.
VI ஆவது பிரிவு - குளிர்பான தொழிற்சாலை தொடர்பான துணைவிதிகள்.
VII ஆவது பிரிவு - சிகை அலங்கார நிலையம், முடி தரித்தல் நிலையம், மேனிமெருகூட்டல் தொடர்பான துணைவிதிகள்.
VIII ஆவது பிரிவு - வெதுப்பகம் (பேக்கரி) தொடர்பான துணைவிதிகள்.
IX ஆவது பிரிவு - பால் பண்ணை தொடர்பான துணைவிதிகள்.
X ஆவது பிரிவு - நீச்சல் தடாகம் தொடர்பான துணைவிதிகள்.
XI ஆவது பிரிவு - பனிக்கட்டித் தொழிற்சாலை தொடர்பான துணைவிதிகள்.
XII ஆவது பிரிவு - சாப்பாட்டுக்கடை, சிற்றுண்டிசாலை, தேநீர், கோப்பி கடை தொடர்பான துணைவிதிகள்.
XIII ஆவது பிரிவு - ஹோட்டல் தொடர்பான துணைவிதிகள்.
XIV ஆவது பிரிவு - தங்குமிடம் தொடர்பான துணைவிதிகள்.
XV ஆவது பிரிவு - லொண்டரி தொடர்பான துணைவிதிகள்.
XVI ஆவது பிரிவு - தொழிற்சாலை தொடர்பான துணைவிதிகள்.
XVII ஆவது பிரிவு - இருதிக்கிரிகை சேவை தொடர்பான துணைவிதிகள்.
XVIII ஆவது பிரிவு - உணவுப் பொருள் விற்பனை செய்யும் நடமாடும் வியாபாரிகள் தொடர்பான துணைவிதிகள்.
XIX ஆவது பிரிவு - பாதசாரிகள் மாறுமிடம் தொடர்பான துணைவிதிகள்.
XX ஆவது பிரிவு - கட்டுமானவேலை தொடர்பான தொழிற்சாலை, கட்டிடப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் சீர்செய்தல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான துணைவிதிகள்.
XXI ஆவது பிரிவு - வாகனங்கள் நிறுத்தல் ஒழுங்குபடுத்தல் தொடர்பான துணைவிதிகள்.
XXII ஆவது பிரிவு - தெருக்கள் சிதைத்தல், தெருக்களில் போக்குவரத்து தொந்தரவு செய்தல் தடைசெய்தல் தொடர்பான துணைவிதிகள்.
XXIII ஆவது பிரிவு - மின்சுடலையகம், முறைமைப்படுத்தல், நிருவகித்தல், அறவிடுதல் தொடர்பான துணைவிதிகள்.
XXIV ஆவது பிரிவு - பொது வியாபார சந்தை நடாத்துதல் தொடர்பான துணைவிதிகள்.
XXV ஆவது பிரிவு - விளையாட்டு மைதானம் தொடர்பான துணைவிதிகள்.
XXVI ஆவது பிரிவு - சனசமூக நிலையம் தொடர்பான துணைவிதிகள்.
XXVII ஆவது பிரிவு - ஈடுபிடித்தல் பதிவுசெய்தல் தொடர்பான துணைவிதிகள்.
XXVIII ஆவது பிரிவு - வாராந்த அறிக்கை இடைத்தகவல் சமர்ப்பித்தல் தொடர்பான துணைவிதிகள்.

*10-288*

# நானாவித அறிவித்தல்கள்

## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான அறிவித்தல் – 2016

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23 (அ) என்னும் பிரிவினால் மத்திய சூழல் அதிகார சபைத் தவிசாளரினால் இச்சபைக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டும் மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்களுக்குப் படிவக் கட்டணம், பரீட்சித்தல் கட்டணம், உத்தரவுப்பத்திரக் கட்டணம் ஆகியவை 2000, நவெம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I இல் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டிற்கு கட்டணம் அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இக்கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவின்கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களை எவ்விதத்திலும் பாதிக்காது.

(திருமதி) மா. அசோக்குமார்,
செயலாளர்,
பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை.

பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை.
2015, செத்தெம்பர் 14.

**உரிமக் கட்டணம் - 2016**

*1987 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150, 151, 152 ஆம் பிரிவுகளின் படி கீழ்த்தரப்பட்டுள்ள அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக்கட்டணங்களை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

**அட்டவணை I**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு துவிச்சக்கரவண்டி - | |
| | (அ) வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 15 0 |
| | (ஆ) வர்த்தக நோக்கம் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படின் | 4 0 |
| 2. | ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் | 25 0 |
| 3. | ஒவ்வொரு கை வண்டிக்கும் | 10 0 |

இத்துடன் துவிச்சக்கர வண்டிக்கு 16 ரூபாவும் ஏனையவற்றுக்கு 10 ரூபாவும் படிவக் கட்டணமாக அறவிடப்படும்.

**சான்றிதழ்கள் வழங்குவதற்கான கட்டணங்கள் பின்வருமாறு அறவிடப்படும்**

| | | ரூபா ச. |
|---|---|---|
| (1) | ஆதனம் சுவீகரிக்கப்படாமைக்கான அத்தாட்சிப்பத்திரக் கட்டணம் | 300 0 |
| (2) | வீதி எல்லைக்கோட்டு அத்தாட்சிப்பத்திரக் கட்டணம் | 500 0 |
| (3) | உத்தியோகத்தர் வைப்பு (வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ்) | 200 0 |
| (4) | கட்டிட விண்ணப்பப் படிவம் | 400 0 |
| (5) | குடியமர்வுச் சான்றிதழ் | 1,000 0 |
| (6) | அனுமதிப்பத்திர கட்டணம் (License) | 500 0 |

**அட்டவணை - II**

**வியாபாரங்களுக்கான உரிமம்**

| | வியாபாரம் அல்லது தொழில் விபரம் | தொழில் நடத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | வருடாந்த மதிப்பீடு 750 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | வருடாந்த மதிப்பீடு 751 ரூபாவி லிருந்து. 1,500 ரூபா வரை | வருடாந்த மதிப்பீடு 1,500 ரூபாவுக்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | ஹொட்டல் வைத்திருத்தல் (உல்லாச பயண ஹொட்டல்) | 500 0 | 750 0 | 3,000 0 |
| 2. | விருந்தினர் தங்கிச் செல்லும் ஹொட்டல் | 500 0 | 750 0 | 2,000 0 |
| 3. | சாப்பாட்டுக்கடை ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | தேனீர்க்கடை அல்லது கோப்பிக்கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | குளிர்பான விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | விற்பனையின் பொருட்டு பதன் அழியக்கூடிய உணவுப் பொருட்களையும் பதார்த்தங்களையும் சேமித்து வைத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | பாண் போறணை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | வாயு அடைத்த பானம் விற்பனைக்கு சேமித்து வைத்தல் (205 போத்தலுக்கு மேல்) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9. | ஐஸ் உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | ஐஸ்கிறீம், ஐஸ்பழம், ஐஸ்பக்கற் ஏனைய குளிர்பானம் தயாரிக்கும் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | தங்கு விடுதி ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | பால் பதப்படுத்தல், சேமித்து வைத்தல், விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | மோட்டார் வாகனம் சேவிஸ் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| வியாபாரம் அல்லது தொழில் விபரம் | தொழில் நடத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி | | |
|---|---|---|---|
| | வருடாந்த மதிப்பீடு 750 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | வருடாந்த மதிப்பீடு 751 ரூபாவிலிருந்து. 1,500 ரூபா வரை | வருடாந்த மதிப்பீடு 1,500 ரூபாவுக்கு மேற்படுமிடத்து |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 14. மோட்டார் வாகனம் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. மின்சார அல்லது வாயு ஒட்டும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. டயர்கள், ரியூப்புக்களை வால்கனைஸ் செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18. மோட்டார் மின்கம்பிகளை மீளப்பொருத்துதல் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. மின்கலங்களுக்கு மின் வலுவூட்டும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. கல்லுடைக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21. படம் பிரேம் போடும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. கோழித்தீன் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 23. பிளாஸ்ரிக் ஒட்டு வேலை உற்பத்தி தொழிற்சாலை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24. துவிச்சக்கர வண்டி திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25. மின்சாரப்பாவனை பொருட்கள் திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26. வாயு விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. மரக்கறி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28. பழக்கடை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. கிடுகு களஞ்சியப்படுத்தல், விற்பனைக்கு வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. மரக்காலை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31. தச்சுத்தொழிற்சாலை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32. தளபாட விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33. மீன் சேகரிக்கும் நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34. கருவாடு விற்பனை அல்லது களஞ்சியப்படுத்தல் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 35. குளிரூட்டிய கோழி இறைச்சி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36. கள்ளுத்தவறணை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37. மதுபான விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 3,000 0 |
| 38. பெற்றோல், டீசல் அல்லது எண்ணெய் வகைகள் களஞ்சியப்படுத்தும் விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 5,000 0 |
| 39. பசளை விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40. அச்சுக்கூடம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. மிளகாய் அல்லது தானியம் அரைக்கும் ஆலை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42. நெல் குற்றும் ஆலை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43. கோதுமை, தானியம் அரைக்கும் ஆலை | 500 0 | 750 0 | 5,000 0 |
| 44. சீமேந்து அரைக்கும் ஆலை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 5,000 0 |
| 45. சீமேந்து விற்பனை அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,500 0 |
| 46. இரும்பு பொருட்கள் பீ. வீ. சி. பைப் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47. பழைய இரும்பு சேகரித்து விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48. 5 பசு மாடுகளுக்கு மேல் அல்லது 10 பன்றிகளுக்கு மேல் அல்லது 10 ஆடுகளுக்கு மேல் வளர்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49. கால்நடைகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. கோழிகள் விற்பனை களஞ்சியப்பத்தல் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51. சீமேந்து உற்பத்தி பொருட்கள் தயாரித்து விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52. ஓட்டோ திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| வியாபாரம் அல்லது தொழில் விபரம் | தொழில் நடத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி | | |
|---|---|---|---|
| | வருடாந்த மதிப்பீடு 750 ரூபாவுக்கு மேற்படாத விடத்து | வருடாந்த மதிப்பீடு 751 ரூபாவி லிருந்து. 1,500 ரூபா வரை | வருடாந்த மதிப்பீடு 1,500 ரூபாவுக்கு மேற்படு மிடத்து |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 53. பேக்கரி உற்பத்தி பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54. குளிர்சாதனப்பெட்டி, வானொலி, தொலைக்காட்சி திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 55. பிளாஸ்ரிக் பைவர் கிளாஸ் மூலம், பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 56. சிகை அலங்கார நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 57. சலவைத்தொழில் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 58. செங்கல் ஆலை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 59. புடவைக்கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 60. சில்லறைக்கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 61. தையல் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 62. நகைக்கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,500 0 |
| 63. பலசரக்குக்கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64. மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,500 0 |
| 65. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 66. சீற் வகைகளுக்கு குசன் செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 67. கடிகாரம் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 68. ஆடம்பரப்பொருள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 69. ஆயுள்வேத மேற்கத்திய மருந்து விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 70. தையல் ஆடைகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 71. பாதணிகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 72. படப்பிடிப்பு நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 73. போட்டோ பிரதி எடுக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 74. வானொலி தொலைக்காட்சி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,500 0 |
| 75. புத்தக காகிதாதிகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 76. தொலைபேசி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

**அட்டவணை - III**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் 149 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1958 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையில் பதிவு செய்து அனுமதி வழங்கப்பட்ட-

(1) விடுதிகள்
(2) உணவுச்சாலைகள்
(3) உணவகம்

ஆகியவற்றின் மூலம் 2015 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற வருமானத்தின் 1% ஐ 2016 ஆம் ஆண்டுக்கு வரியாகச் செலுத்தப்படவேண்டும்.

**அட்டவணை - IV**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 152 ஆம் பிரிவின் நியதிகளின்படி குறித்த சில தொழில்கள் மீதான வரி*

கீழ்க்காணும் தொழில்களை மேற்கொள்பவர்கள் ஒவ்வொருவரும் முந்திய ஆண்டில் அத்தொழிலை நடாத்தியதற்கான கீழ்க்காணும் ஆவண ரீதியான ஆதாரங்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் வருடத்திற்கான வரிகளை கீழ்த்தரப்பட்டுள்ள விபரங்களின்படி செலுத்துதல் வேண்டும்.

(1) முந்திய ஆண்டின் வியாபாரத்திற்கான வருமான அறிக்கை/இறுதிக்கணக்கு பிரதி ஒன்று
(2) முந்திய ஆண்டின் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு வருமான வரி செலுத்தப்பட்ட விரங்கள் அடங்கிய பிரதி ஒன்று.

*தொழில் விபரங்கள்*

(1) சட்டத்தரணிகள்
(2) நொத்தாரிசுகள்
(3) கடன் வழங்குநர்
(4) ஏலதாரர்
(5) தரகர்
(6) கட்டிட வரைபடம் வரைவோர்
(7) மோட்டார் வாகனங்கள் ஓட்டப் பயிற்றுவிக்கும் நிறுவனம் வைத்திருப்பவர்
(8) கணக்குப் பரிசோதனை ஸ்தாபனத்தை வைத்திருப்பவர்
(9) உள்ளூர் வர்த்தக வங்கி நிறுவனங்கள்
(10) தொழில் முகவர்கள்
(11) காப்புறுதி முகவர்கள்
(12) பாதுகாப்புச் சேவை வழங்கும் முகவர்கள்
(13) பிரயாண முகவர்கள்
(14) தனியார் கல்வி, தனியார் முறைப்போதனை (ரியூசன் நிலையம்)
(15) தனியார் பாடசாலை
(16) நகை அடவு பிடிப்பவர்
(17) ஒப்பந்தக்காரர்
(18) வைத்திய சேவையாளர்
(19) தனியார் மருந்தகம்
(20) தனியார் மருத்துவ மனைகள்
(21) உத்தரவுபெற்ற நில அளவையாளர்கள்
(22) பல் வைத்தியர்
(23) கணினிப் பயிற்சி நிலையம் ஒன்றை நடாத்தல்
(24) கேபிள் ரீவி நிலையம் ஒன்றை நடாத்துதல்
(25) முன்பள்ளி பாடசாலை ஒன்றை நடாத்துதல்

| | வருடத்திற்கான வியாபார பெறுகைகள் | செலுத்தவேண்டிய வருடாந்த வரி ரூபா ச. |
|---|---|---|
| (1) | 6,000 ரூபாவுக்கு மேலும் 12,000 ரூபாவுக்கு குறையவும் | 90 0 |
| (2) | 12,001 ரூபாவுக்கு மேலும் 18,750 ரூபாவுக்கு குறையவும் | 180 0 |
| (3) | 18,751 ரூபாவுக்கு மேலும் 75,000 ரூபாவுக்கு குறையவும் | 360 0 |
| (4) | 75,001 ரூபாவுக்கு மேலும் 150,000 ரூபாவுக்கு குறையவும் | 1,200 0 |
| (5) | 1,50,001 ரூபாவுக்கு மேலும் | 3,000 0 |

## அட்டவணை V

நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாமல் திரிந்து விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு பின்வரும் கட்டணம் அறவிடப்படும்

| | வியாபாரத் தன்மை | ரூபா ச. |
|---|---|---|
| (1) | நாள் ஒன்றிற்கு லொறி மூலம் விற்பனை செய்யும் முட்டை தேங்காய், மரக்கறி, ஐஸ்கிறீம், பாண், வாழைப்பழம், சோளம் வியாபாரம் | 50 0 |
| (2) | கை வண்டி, தள்ளு வண்டிகள் மூலம் உடல் நலத்திற்கு ஏற்ற உணவுப்பொருட்கள் பானங்களில் விற்பனைக்கு (வருடாந்தம்) | 150 0 |
| (3) | வாகனம் மூலம் பால் விற்பனைக்கு வருடாந்தம் | 500 0 |

## அட்டவணை - VI

### முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையினால் 13.02.1998 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப்பத்திரிகையில் பகுதி IV இல் வெளியிடப்பட்ட முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைக்கும் துணை விதிகளுக்கு அமைவாக பின்வரும் இடங்கள் முச்சக்கர வண்டி வாகனத்தரிப்பிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

(1) நிலாவெளி வீதி யு. என். எச். சி. ஆர். முகாம் முன்னால்
(2) பாலையூற்று குடமாதாச் சந்தி
(3) அநுராதபுரச்சந்தி பாரதிபுரம்
(4) செல்வநாயகபுரம் பாடசாலை வீதிச் சந்தி
(5) 4 ஆம் கட்டைச் சந்தி
(6) வேளாங்கன்னிச் சந்தி, ஆண்டாங்குளம்
(7) வெள்ளைமணல் சந்தி
(8) பிறிமாச் சந்தி
(9) ரி. ரி. ஏ. சந்தி
(10) தானியகம சந்தி
(11) சீனன்குடா புகையிரத நிலையம்
(12) வெள்ளைமணல் கிண்ணியா இறங்குதுறை
(13) அலஸ்தோட்டம் வீதிச்சந்தி
(14) 3 ஆம் கட்டை சந்தி
(15) ஆனந்தபுரி வைரவர் கோவிலடி
(16) அபயபுர சுற்றுவட்டம்
(17) ஆண்டாங்குளம் வீதிச் சந்தி
(18) செல்வநாயகபுரம் வைத்தியசாலை
(19) வரோதயநகர் சந்தி கன்னியா வீதி
(20) இறையிறக்க தேவாலயப் பகுதி - நிலாவெளி வீதி
(21) வைரவர் கோயிலடி, நிலாவெளி வீதி
(22) அநுராதபுர சந்தி (Down Town முன்பாக)
(23) ஆத்திமோட்டை பாடசாலைச் சந்தி
(24) இலுப்பைக்குளச் சந்தி
(25) சாம்பல்தீவு பாலச்சந்தி
(26) வள்ளுவர் வீதிச் சந்தி (செல்வநாயகபுரம்)
(27) நாகம்மாள் ஆலயச் சந்தி அலஸ்தோட்டம்
(28) 5 ஆம் கட்டை
(29) 6 ஆம் கட்டை
(30) தானியகம - 02
(31) முருகன் கோயிலடி, லிங்கநகர்
(32) ஆண்டாங்குளம் ஐஸ் உற்பத்திச் சாலை முன்பாக
(33) 4 1/2 கட்டை மிரிஸ்ச வளைவுச் சந்தி
(34) கப்பல்துறை நுழைவாயில் சந்தி
(35) கண்டி வீதி பெரிய பள்ளி முன்ரல்

மேற்படி இடங்களில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு பதிவுக் கட்டணமாக 600 ரூபா அறவிடப்படும். இத்தொகையினை 2016.04.01 ஆந் திகதிக்கு முன்பு செலுத்தி பதிவுகளை புதுப்பித்தல் வேண்டும். பணம் செலுத்தாதவர்களது ஆட்டோ தரிப்பிட அனுமதி இரத்துச் செய்யப்படும்.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் நிறுத்தி வைக்கும் வாகனங்களுக்கு நாளொன்றுக்கு அல்லது பகுதிக்கு பின்வரும் கட்டணம் 2016 ஆம் ஆண்டிற்கு அறவிடப்படும்.

| | விபரம் | ரூபா ச. |
|---|---|---|
| (1) | மோட்டார் சைக்கிள் | 10 0 |
| (2) | முச்சக்கர வண்டி | 20 0 |
| (3) | வான், கார் வண்டிக்கு | 50 0 |
| (4) | பஸ், லொறி | 100 0 |

சீனன்குடா சீமேந்து தொழிற்சாலை, பிறிமா மாவரைக்கும் ஆலைப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்படும் அல்லது 10 தொன் பொருட்களை கொண்டு செல்லும் லொறி ஒன்றிற்கு நாளொன்றுக்கு அல்லது பகுதிக்கு 25.00 ரூபாவும் 10 தொன்னிற்கு மேற்படின் 50.00 ரூபாவும் அறவிடப்படும்.

### அட்டவணை - VII

### விளம்பரக் கட்டணம் - 2016

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் நியமனத்துணை விதிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் படி 1996.01.04 ஆந் திகதிய பகுதி IV (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட துணை விதியின் 39 ஆம் பிரிவின்படி விளம்பரக்கட்டணம் பின்வருமாறு அறவிடப்படும்.

| விபரம் | | அளவு | கால எல்லை 3 மாதம் ரூபா ச. | | 12 மாதம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| 1. | கொடி விளம்பரம் | 1 சதுர அடி | 10 0 | - | 40 0 |
| 2. | ஒளியூட்டப்பட்ட விளம்பரங்கள் | 1 சதுர அடி | 40 0 | - | 160 0 |
| 3. | ஒளியூட்டப்படாத விளம்பரங்கள் | 1 சதுர அடி | 25 0 | - | 100 0 |
| 4. | சுவர்களில் அமைக்கப்பட்ட விளம்பரம் | 1 சதுர அடி | 25 0 | - | 100 0 |

### அட்டவணை - VIII

கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு கட்டணம் பின்வருமாறு அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| (1) | கிரவல் கியூப் ஒன்றிற்கு | ரூபா 50 0 |
| (2) | மணல் கியூப் ஒன்றிற்கு | ரூபா 50 0 |
| (3) | கருங்கல் கியூப் ஒன்றிற்கு | ரூபா 50 0 |
| (4) | 100 கியூப்பிற்கு பின் மீளவும் கிரவல் அனுமதி பெறல் | |

சூழல் பாதுகாப்பு குப்பை அகற்றல் தனியார் நிறுவனம்/அரச நிறுவனம்

| | |
|---|---|
| 1 கியூப்பிற்கு | ரூபா 500 0 |
| தண்டம் | ரூபா 1,000 0 |

வாகனம் வாடகைக்கு விடல்

| | எரிபொருள் இல்லாது ரூபா ச. | எரிபொருளுடன் ரூபா ச. |
|---|---|---|
| உழவு இயந்திரம் 8 மணித்தியாலம் அல்லது 100 கி. மீற்றருக்கு | 2,000 | 3,500 |
| | சபை எல்லைக்குள் | சபை எல்லைக்கு வெளியில் |
| றோட் ரோலர் (வீதி உருளை) | 10,500 | 12,000 |

### அட்டவணை - IX

### கட்டிட அனுமதி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் 78 ஆம் பிரிவுகளின் கீழ் 1988.08.23 ஆந் திகதிய 320/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிவிசேட வர்த்தமானியின் 1 ஆம் பகுதியில் கௌரவ அமைச்சரினால் பிரகடனம் செய்யப்பட்ட துணைவிதிகளின் படி இப்பிரதேச சபைக்கு கட்டிட விண்ணப்பம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் கட்டிடம் சம்பந்தமாக கட்டணமானது 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அறிவித்தலின் பிரகாரம் செலுத்தப்படுதல் வேண்டும்.

10-293/1

## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

கட்டாக்காலியாகத் திரியும் மிருகங்களை தடை செய்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 66 (1), (3), (4) ஆம் பிரிவுகளின் காட்டப்பட்டுள்ள விதிகளின்படி திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பிரதான பாதைகளில் அல்லது உள்ளக பாதைகளில் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் ஆடுகள், மாடுகள் பிரதேச சபையினால் பீடிக்கப்பட்டு அதற்கென அமைக்கப்பட்டுள்ள பொது இடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் கட்டப்பட்டுள்ளவாறு 2016.01.01 ஆந் திகதியிலிருந்து கட்டணங்கள் அறவிடப்படும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

(திருமதி) மா. அசோக்குமார்,
செயலாளர்,
பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை.

பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை,
2015, செத்தெம்பர் 14.

| | | ரூபா ச. |
|---|---|---|
| (1) | மிருகம் ஒன்று தடை செய்வதற்காக | 1,000 0 |
| (2) | மிருகத்தினை 24 மணி நேரத்திற்குள்ளாக மீட்டுக்கொள்ள தவறும் பட்சத்தில் மேலதிக நாள் ஒன்றுக்கு | 500 0 |

அவ்வாறு தடை செய்யப்படும் மிருகங்களுக்கான மேற்கூறிய கட்டணத்தைச் செலுத்தி மீட்டுக்கொள்ளத் தவறினால் மிருகங்கள் கைப்பற்றப்பட்டு 10 நாட்களில் தடை செய்யப்பட்ட மிருகங்கள் பிரசித்த ஏலவிற்பனையில் விற்கப்படுவதுடன் ஏலத்தில் கிடைக்கும் பணம் பிரதேச சபையின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

10-293/3

---

## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

ஆதனவரி அறவீடு - 2016

*2016 ஆம் ஆண்டுக்கான ஆதன வரிகள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின்படி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து ஆதனங்கள் மீதும் 2009.07.17 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் உப அலுவலக எல்லைக்குள் பின்வருமாறு 2016 இல் அறவிடப்படும்.*

1. உப்புவெளி, சாம்பல் தீவு உப அலுவலகப் பகுதி குடாக்கரை உப அலுவலகப் பகுதி
   (அ) வர்த்தக ஆதனங்கள் 2012 ஆம் ஆண்டுப் பெறுதமியில் - 6%
   (ஆ) வீட்டு ஆதனங்கள் 2012 ஆண்டுப் பெறுமதியில் 6%

மேலும் மேற்படி வரியானது மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நான்கு காலாண்டுத் தவணைகளில் சம தொகைகளாக செலுத்தப்படல் வேண்டும்.

பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 134 (7) பிரிவின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கழிவுத் தொகைகள் அனுமதிக்கப்படும்.

(அ) 2016.01.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வரிகளை முழுமையாகச் செலுத்தப்படும் பட்சத்தில் 10% கழிவு.

(ஆ) காலாண்டுக்குரிய வருடாந்த வரிகள் ஒவ்வொரு காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தப்படும் பட்சத்தில் 5% கழிவு.

மேலே குறிப்பிடப்பட்ட திகதிகளுக்குப் பின்னர் செலுத்தப்படும் சகல கட்டணங்கள் மீதும் வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிட வளவுகள் மீது 15% படியும், ஏனைய வளவுகள் தொடர்பில் 20% படியும் விறாந்துக் கட்டணங்கள் அறவிடப்படும்.

(திருமதி) மா. அசோக்குமார்,
செயலாளர்,
பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை.

பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை,
2015, செத்தெம்பர் 14.

10-293/4

---

**திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை**

நாய்கள் பதிவுக் கட்டணம்- 2016

**நாய்கள் பதிவுக் கட்டளைச்சட்டம்**

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வைத்திருக்கும் நாய்களுக்கு நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) இன் (4) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுக்கான பதிவுக் கட்டணமாக நாய் ஒன்றுக்கு ரூபா 5 அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்.

(திருமதி) மா. அசோக்குமார்,
செயலாளர்,
பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை.

பட்டினமும் சூழலும் பிரதேச சபை,
திருகோணமலை.
2015, செத்தெம்பர் 14.

10-293/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2015 |
| | | வெள்ளி | 09.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2015 |
| | | வெள்ளி | 16.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2015 |
| | | வெள்ளி | 23.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2015 |
| | | வெள்ளி | 30.10.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2015 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2015 |
| | | வெள்ளி | 13.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2015 |
| | | வெள்ளி | 20.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2015 |
| | | வெள்ளி | 27.11.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2015 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 04.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.11.2015 |
| | | வெள்ளி | 11.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.11.2015 |
| | | வெள்ளி | 18.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.12.2015 |
| | | புதன் | 23.12.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.12.2015 |

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.